# “தகுதியான பெண்கள் அனைவருக்கும் உரிமைத்தொகை சேர வேண்டும்”

## ‘உங்களுடன் ஸ்டாலின்’ முன்னெடுப்பை சிறப்பாக மேற்கொள்ள – சிவகங்கையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் – துணை முதலமைச்சர் அறிவுரை!

***சிவகங்கை, ஜூன் 19-***

***சிவகங்கை மாவட்டத்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஆட்சியர் அலுவலகத்தில் அரசின் திட்டப் பணிகள், செயல்பாடுகள், முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.***

***கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:***

நமது முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்து நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து, ஐந்தாவது ஆண்டு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் அரசின் பல்வேறு நலத்திட்டங்கள், புதிய முன்னெடுப்புகளின் பலன், மக்களுக்கு தங்கு தடையின்றி சென்று சேர காரணமாக இருக்கின்ற அரசு அலுவலர்கள் உங்கள் அத்தனை பேருக்கும், எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மனுக்கள் வெறும் தாள்கள் அல்ல!**

இந்த ஆய்வுக் கூட்டத்தை முடித்து விட்டு, தொடர்ந்து நலத்திட்ட உதவிகளையும் வழங்க இருக்கிறோம். அதற்கும் பயனாளிகளின் சார்பாக உங்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், நம் சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் நீங்கள் ஆய்வு மேற்கொண்டதாக இங்கு தெரிவித்து இருக்கிறீர்கள். சில மாவட்டங்களில் ஆய்வு மேற்கொள்ளும்பொழுது, விளையாட்டு உபகரணங்கள், ஊராட்சி செயலர் அலுவலகத்திலும், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் இல்லங்களிலும் உள்ளதாக எங்களுக்கு தெரிய வந்துள்ளது. அது போன்று நடக்காமல் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அனைத்து விளையாட்டு உபகரணங்களையும் கிராமங்களில் இருக்கின்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு கொடுத்து முறையாக விநியோகம் செய்து, அதை திரும்பப்பெற்று பராமரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் தலைமையிலான நமது அரசு, ஏற்கெனவே நடைமுறையில் உள்ள திட்டங்களை மேம்படுத்தியும், முற்போக்கான பல புதிய முன்னெடுப்புகளை செயல்படுத்தியும் வருகிறது. இந்தத் திட்டங்கள் மக்களிடம் சென்று சேர்வதில், சில நேரங்களில், சில சிக்கல்கள் ஏற்படலாம். சிலர் அதற்கு இடையூறாகவும் இருக்க வாய்ப்பு உள்ளது. அதுபோன்ற சூழலில், மக்கள் தரும் மனுக்கள் மூலமாகத்தான் மக்களின் பிரச்சினை என்ன என்பது நமக்குத் தெரியவரும். அந்த மனுக்களுக்கு உரிய நேரத்திற்குள், உரிய காலத்திற்குள் தகுந்த பதில் அளித்து தீர்வு காண வேண்டியது நம் அனைவரின் கடமை.

அந்த நம்பிக்கையில்தான் மக்கள் நம்மிடம் மனுக்களை தருகிறார்கள். மனுக்களை வெறும் தாள்களாகப் பார்க்கக்கூடாது. மக்களின் வாழ்க்கையாகப் பார்க்க வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். அதை நீங்கள் மனதில் வைத்து செயல்பட வேண்டும் என்று உங்கள் எல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

**திட்டங்கள் மக்களை சேர வேண்டும்!**

சிவகங்கை மாவட்டத்தில் சாலைப் பழுதுகள் தொடர்பாக செய்தித்தாள்களில் அதிக செய்திகள் வருகின்றன.

எனவே, மாவட்ட ஆட்சியர் அவர்கள் உள்ளாட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறை செயலாளர்களை தொடர்புகொண்டு, சாலைகளின் நிலையை எடுத்துக்கூறி, பணிகள் விரைவாக நடைபெறுவதை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாவட்டத்தின் சில இடங்களில், மின் தடை ஏற்படுவது தொடர்ந்து பத்திரிகை செய்திகளாக வந்து கொண்டிருக்கிறது. அதற்கான உரிய நடவடிக்கை எடுக்குமாறும் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் விடுபட்டவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம் என்று முதலமைச்சர் அறிவித்து இருக்கிறார்கள். அதற்கு ஜூலை 15ஆம் தேதி முதல் விண்ணப்பங்கள் வழங்கலாம் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ‘உங்களுடன் ஸ்டாலின்’ என்ற பத்தாயிரம் முகாம்களை நடத்த வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். எனவே, அந்த மனுக்களை எல்லாம் பெற்று, ஆய்வு செய்து, தகுதியுள்ள ஒருவர் கூட விடுபடாமல் அதிக அளவிலான மகளிர் பயன் பெறுகின்ற வகையில் நீங்கள் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

> **மக்கள் நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பொழுது, மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்து அவர்களையும் அழைத்துக் கொண்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

அரசு எவ்வளவு சிறப்பான திட்டங்களை முன்னெடுத்தாலும், முதலமைச்சர் எந்தத் திட்டத்தை தீட்டினாலும், அது அடித்தட்டு மக்களுக்கு சென்று சேருவதை நீங்கள்தான் உறுதி செய்து தர வேண்டும். எனவே அரசின் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு சென்று சேரும் வகையில் பணியாற்றி, அரசுக்கும் மக்களுக்கும் ஒரு நல்ல பலமாக இருந்து, இந்த அரசுக்கும், நம் அமைச்சருக்கும் ஒரு நல்ல பெயரை வாங்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்படும்!**

இங்கு சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அமைச்சர் சேர்ந்து பல்வேறு கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். இதையெல்லாம் முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் மூலமாக அதற்கு ஒரு நல்ல பதிலை, நல்ல தீர்வை நாங்கள் எட்டித் தருவோம் என்ற வாக்குறுதியை தருகிறேன். இங்கு இருக்கின்ற அரசு அலுவலர்களுக்கு மீண்டும் ஒரு வேண்டுகோள்.

மக்கள் நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பொழுது, மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்து அவர்களையும் அழைத்துக் கொண்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் குறித்து வைத்திருக்கிறோம். சில பணிகளை இந்த காலக்கெடுக்குள் முடித்துவிடுவோம் என்று நீங்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள். தயவு செய்து அந்த காலக்கெடுவுக்குள் அப்பணிகளை முடிக்க வேண்டும் என்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, மாங்குடி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ்., கூடுதல் செயலாளர் சஜீவனா ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் ஐ.ஏ.எஸ்., மாநகர மேயர் முத்து துரை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் ஐ.பி.எஸ்., சார் ஆட்சியர் ஆயுஸ் வெங்கட் ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் செல்வ சுரப்பி, ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர் வானதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (17.6.2025) சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி. சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப்யாதவ், கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித், காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி கா.வானதி, சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## சிவகங்கை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் செயல்பட்டு வரும்

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

## மாணவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்!



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.6.2025) சிவகங்கை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதி மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்து ஆய்வு செய்ததுடன், மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். இந்நிகழ்வில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், உள்பட அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

***சென்னை, ஜூன் 19-***

***தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.6.2025) சிவகங்கை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.***

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றது.

விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளவும், வெளிநாடுகளுக்கு சென்று பயிற்சி பெறவும், அதிநவீன உயர்தர விளையாட்டு உபகரணங்களை வாங்கவும், தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை உருவாக்கி நிதியுதவி அளித்து வருகின்றது.

மேலும், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையை வழங்கி வருகின்றது.

கிராமங்களில் அனைத்து ஊராட்சிகளிலும் விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தின் மூலமாக பல்வேறு விளையாட்டுப் பொருட்களை வழங்கியுள்ளது.

மேலும், அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள விளையாட்டு விடுதிகளுக்கு நேரடியாக சென்று கள ஆய்வு மேற்கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களை சாதிக்கும் வகையில் உத்வேகம் அளித்து வருகின்றார்.



சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளுக்காக கலந்து கொள்ளச் சென்றபோது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவினை தானே சென்று வாங்கி முறையாக உணவு வழங்கப்படுகின்றதா என்றும், ருசி நன்றாக உள்ளதா என்றும் மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்.

தொடர்ந்து விடுதியில் உள்ள மாணவர்களின் படுக்கைகள், விடுதியின் கழிப்பிட வசதிகள் ஆகியவற்றையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள். திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், உள்பட அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.